1979 ஏப்ரல் 2]

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் சம்பந்தமான கேள்வி இது என்று சொல்லி, தயவு செய்து அமைச்சர் தனிக்கேள்வி போடுங்கள் என்று சொல்லிவிடக்கூடாது. பழனி தாலுக்காவில் மொத்தம் 3-4 பழுதடைந்து கிடக்கிறது. அதற்கு கிட்டத்தட்ட 85,000 ரூபாய் இதுவரையில் செலவிடப்பட்டு இருக்கிறது 3 ஆண்டுகளாக எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. அந்த இயக்குனரையும்—டிரைவரையும் வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள், இது சம்பந்தமாக நான் அரசாங்கத்திற்கு ஏற்கனவே புகார் அனுப்பி இருந்தேன். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் விளக்கம் அளிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் இல்லை. ஆனால் நிச்சயமாக அரசு கவனிக்கும்.

நகராட்சிகளில் சொத்து வரி.

*வினா எண். 612—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் சொத்து வரி உயர்த்துவதை நிறுத்தி வைக்க அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ;

(அ) ஆம்.

(ஆ) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் பொறுப்பேற்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தனி அதிகாரியின் ஆட்சியின் கீழ் இருக்கும்படியான நகராட்சிகளில் 3 மடங்கு, 4 மடங்கு, 5 மடங்கு கூட வரி உயர்த்தப்பட்டுள்ள விவரங்கள் குறித்து மக்களிடமிருந்து ஏராளமான ரிப்போர்ட்டுகள், குறிப்பாக கோவை நகராட்சி மன்றத்தில் இருந்து அப்படிப்பட்ட ரிப்போர்ட்டுகள் அரசுக்கு வந்துள்ளதா? அது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள், அங்கே அந்த வசூலிப் பதற்கு நிர்ப்பந்தம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தப் புகாரின் அடிப்படையில் தான் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் மற்றொரு புகார் அதன் அடிப்படையில் எழுப்பியிருக்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நகராட்சிகளில் விதிக்கப்படுகிற வரி நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பேரூராட்சியில் இது போன்ற வரி உயர்வு செய்வது சட்ட விரோதம் என ஆட்சேபித்து அரூர் பேரூராட்சியில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அதை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பொதுவாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரி உயர்வு செய்து, அதன் மூலம் வரி உயர்த்தப்பட்டு இருக்குமானால், அப்படிப் பட்ட உயர்வினை மக்கள் மன்றம் ஏற்படும் வரையில் நிறுத்தி வைக்க முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஊராட்சிகளுக்கு வரி விதிக்கின்ற நேரத்திலே தனி அதிகாரிகள்தான் இந்த வரியை நிர்ணயம் செய்கிறார்கள். அப்பீல் செய்வதற்குக் கூட இடம் இல்லாத வகையில் நிலைமை இருக்கிறது. நகராட்சிகளில் உள்ளது போன்ற அப்பீல் முறையை ஊராட்சிகளுக்கும் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரை ஆண்டுக்கு ஒருமுறை புதிய வரிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. வாடகை அடிப்படையிலும், சொத்து மதிப்பின் அடிப்படையிலும் வரி விதிக்கிறார்கள். வரிவிதிப்பு முறைகளை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, நகராட்சிகள் சொந்த வீடுகளுக்கு விதிக்கின்ற வரியானது வாடகை வீடுகளுக்கு விதிக்கின்ற அடிப்படையில் பல மடங்கு அதிகமாக விதிக்கப் படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இந்தக் குறைபாடுகளை ''ரிவிஷன் ஆபீஸர்'' என்கின்ற முறையிலே தனி அதிகாரிகள்தான் விதிக்கிறார்கள். இந்த சொத்து வரி உயர்வினை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றம் அமைக்கப்பட்ட பிறகு இதுபற்றி அரசு விரிவாகப் பரிசிலிக்கும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, கோவை நகராட்சியிலே விதிக்கின்ற வரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து செய்தி வந்தது. கோவை நகரிலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய ஆலோசனைகளைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு சரியான அடிப்படையில் வரிவிதிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? அல்லது அதற்குப் பதிலாக தனி அதிகாரிகளுடைய ஆலோசனையை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனி அதிகாரி தருகின்ற தகவல், அனைத்துக் கட்சியினர் விடுக்கின்ற வேண்டுகோள் இவைகளை எல்லாம் பரிசீலித்துத்தான் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 613—619 நாளைய தினம் எடுத்துக் கொள்ளப்பெறும். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தன்னிலை விளக்கம்.

உறுப்பினர் திரு என். கிட்டப்பா அனுமதி கோரல்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, என்னைப்பற்றி ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுத்து மூலமாக எழுதித் தாருங்கள். நான் அதைப் பரிசீலனை செய்து என் முடிவைத் தெரிவிக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : மிக்க நன்றி.

(3) உரிமைப் பிரச்னை.

முரசொலி, அலையோசை, தினகரன் நாளேடுகள் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். மணிமாறன், திரு. கு. அ. செங்கோட்டையன் மற்றும் டாக்டர் கே. சமரசம்